DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.115/2023 |
| Deposition of Witness | { PW.4 |
| | { Prosecution |
| | { |
| Name | : சித்ரா |
| Father's Name | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2024

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.4 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது செட்டிப்பட்டி கப்பரையன் காட்டில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1,2,3 யை தெரியும். கடந்த 15.04.2018 ம் தேதி ஞாயிற்று கிழமை காலை 9.30 மணிக்கு நான் எங்களுடைய காட்டில் இருந்தேன். அப்போது எங்களுக்கு சொந்தமான காட்டின் வரப்பில் எதிரிகள் கருப்பணன், லட்சுமணன், சாந்தி ஆகியோர் மண் அள்ளி கொண்டிருந்தார்கள். அதை பார்த்துவிட்டு என் அப்பா தகராறில் இருக்கும் போது எதற்காக காட்டில் மண் அள்ளுகிறீர்கள் என்று எதிரிகளை பார்த்து கேட்டார். அதற்கு 1 ம் எதிரி என் அப்பாவிடம் உனக்கு எங்கடா தேவடியா பையா கண்டாரோளி பையா இங்கு காடு இருக்கிறது என்று சொல்லி திட்டினார். பின்பு கையில் வைத்திருந்த கருக்கருவாளில் என் அப்பாவின் கழுத்தில் வெட்டினார். அப்போது என் அப்பா குனிந்துவிட்டதால் என் அப்பாவின் இடது

பக்க தோள்பட்டையில் காயம் ஆனது. அப்போது 2 ம் எதிரி என் அப்பாவை கீழே தள்ளி என் அப்பாவின் நெஞ்சின் மீது ஏறி உக்கார்ந்து கொள்ள 1 ம் எதிரி கையில் இருந்த கருக்கருவாளால் என் அப்பாவின் 2 கால் தொடைகளையும் அறுத்தும் வெட்டியும் காயம் ஆக்கினார். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அருவாள் தான் சம்பவத்தின் போது 1 ம் எதிரி கையில் வைத்திருந்தார். அப்போது என்னுடன் இருந்த என் அம்மா என் கணவனை அடிக்காதீர்கள் என்றும், வெட்டாதீர்கள் என்றும் சத்தம் போட்ட போது 3 ம் எதிரி என் அம்மாவின் தலைமுடியை பிடித்து இழுத்து காலால் எட்டி உதைத்தார். அப்போது அங்கிருந்த என் சித்தப்பா கந்தசாமி எதிரிகளை தடுக்க முயன்ற போது நீயும் இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி 1 ம் எதிரி அவரையும் அதே கருக்கருவாளால் என் சித்தப்பாவின் வலது கழுத்தில் வெட்டினார். அதனால் என் சித்தப்பாவுக்கு வலது தோள்பட்டையில் காயம் ஆனது. மீண்டும் என் சித்தப்பாவை 1 ம் எதிரி வெட்ட வந்த போது என் சித்தப்பா அவரை தடுக்க முயன்றார். அதனால் என் சித்தப்பாவின் இடது கை பெருவிரல் அருகில் காயம் ஆனது. அப்போது 2 ம் எதிரி அங்கு கிடந்த கருங்கல்லை எடுத்து என் சித்தப்பாவின் பின்னந்தலையில் ஓங்கி அடித்தார். அந்த கல் சா.பொ.2 தான். அதனால் என் சித்தப்பா வலி தாங்க முடியாமல் கத்தினார். அப்போது நானும் என் அப்பாவை வெட்டாதீர்கள், அடிக்காதீர்கள் என்று சத்தம் போட்டு கொண்டிருந்தேன். அப்போது அக்கம்பக்கம் இருந்தவர்கள் ஓடி வந்ததை பார்த்துவிட்டு 1 ம் எதிரி அருவாளை கீழே எறிந்துவிட்டு உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்றும், என்றைக்கு இருந்தாலும் உங்கள் சாவு என் கையில் தான் டா என்று சொல்லி கொண்டு அங்கிருந்து ஓடி விட்டார். மற்ற எதிரிகளும் அவர் பின்னார் ஓடி விட்டார்கள். அப்போது அங்கு வந்த செல்வம், பழனிசாமி, கந்தசாமி ஆகியோர் என் அப்பாவையும் என் சித்தப்பா மற்றும் அம்மாவையும் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி வரவழைத்து எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். அதன் பின்பு மேல்சிகிச்சைக்காக சேலம் விநாயகா மிசன் மருத்துவமனைக்கு என் அப்பா, சித்தப்பா, அம்மா ஆகியோரை அனுப்பி வைத்தார்கள். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு தற்போது வயது 23. சம்பவத்தின் போது எனக்கு வயது 17. போலீஸ் விசாரணையின் போது என் வயது 15 என்று சொன்னேன். எனக்கு திருமணமாகிவிட்டது. எனக்கு திருமணமாகி 4 ½ வருடங்கள் ஆகிறது. என் கணவரின் பெயர் செல்வம். அவரும் இந்த வழக்கில் சாட்சி என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்திற்கு என் அப்பா, சித்தப்பா மற்றும் என் கணவர் ஆகியோர் வந்துள்ளார்கள். என் வீட்டில் இருந்து சம்பவம் நடந்த

இடத்திற்கும் சுமார் 3 கி.மீ இருக்கும் என்றால் சரியல்ல. 300 அடி இருக்கும். சம்பவத்தின் போது நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. என் தாத்தாவுடன் பிறந்தவர்கள் மொத்தம் 3 பேர். அவர்களுக்கு எவ்வளவு நிலம் சொந்தம் என்று எனக்கு தெரியாது. எந்த நிலத்தில் யார் விவசாயம் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியும். என் வீட்டிலிருந்து கல்லம்பாளையம் செல்லும் தார் ரோட்டில் சென்று கிழக்கில் போகும் மண் ரோட்டில் 3 கி.மீ தூரத்தில் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. 300 அடி தூரம் தான் இருக்கும். மண் ரோட்டிற்கு வடக்கில் எங்கள் நிலம் உள்ளது. அந்த நிலத்திற்கு வடக்கிலும், மேற்கிலும் எதிரிகளின் நிலம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் நிலத்தில் சுமார் 3 அடி ஆழத்திற்கு ஏற்கனவே மண் அள்ளிவிட்டோம் என்றால் சரிதான். அந்த நிலத்தில் முள் செடிகள் முளைத்து புதராக கிடந்தது என்றால் சரியல்ல. சிறு சிறு செடிகள் தான் இருந்தது. எதிரிகள் சம்பவத்தின் போது JCB வைத்து மண் அள்ளினார்கள் என்றால் சரியல்ல. மண் வெட்டியால் தான் மண் அள்ளினார்கள். எங்கள் காட்டிற்கு வடபுறம் உள்ள வரப்பில் தான் சண்டை நடந்தது. எதிரிகள் மண் அள்ளும் போது நாங்கள் போய் அவர்களிடம் கேட்டதால் தான் சண்டை நடந்தது என்றால் சரிதான். அது எதேர்ச்சையான சண்டை என்றால் சரிதான். சம்பவத்தின் போது நானும் அருகிலேயே தான் நின்றேன். நானும் சண்டையை விலக்கிவிட்டேன். இந்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சண்டையில் எதிரிகளுக்கும் காயம் ஆகி அவர்களும் குமாரபாளையம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக என் தாத்தா, அப்பா, சித்தப்பா ஆகியோர்கள் மீது தேவூர் காவல் நிலையத்தில் எதிரிகள் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சா.பொ.1 அருவாளை நான் தான் போலீசாரிடம் எடுத்து கொடுத்தேன். சா.பொ.2 யும் நான் தான் போலீசாரிடம் எடுத்து கொடுத்தேன். கல்லால் அடித்த போது என் சித்தப்பாவின் தலையில் இரத்தம் வரவில்லை. நான் சொல்வது போல் 2 ம் எதிரி என் சித்தப்பாவின் கல்லால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. அருவாள் மற்றும் கல்லை எதிரிகள் பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தான் போலீசாருக்கு அவற்றை தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் அப்பா, சித்தப்பாவுக்கு உடைகளில் இரத்த கறை படிந்தது. சம்பவம் சுமார் 5 நிமிடம் நடந்தது. நான் காலை 9.20 மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பினேன். ஆம்பிலன்சுக்கு யார் தகவல்சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எடப்பாடி மற்றும் விநாயகா மிசன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. சம்பவம் தொடர்பாக யார் போலீஸ் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் சம்பவத்திற்கு மறுநாள் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை

விசாரிக்கவில்லை. எங்களது நிலத்தில் நாங்கள் ஏற்கனவே மண் அள்ளி முடித்துவிட்டோம் என்றால் சரிதான். அதனால் எதிரிகள் எங்கள் நிலத்தில் மண் அள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் நிலத்தில் தான் அள்ளினார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு என் அப்பா, அம்மா, சித்தப்பா தான் காரணம் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் அப்போது நான் வீட்டில் தான் இருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் பட்டா நிலம் என்றால் சரிதான். எதிரிகள் என் அப்பா, அம்மா, சித்தப்பா மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சித்ரா

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.